
உ

# காங்கேய நல்லூரான்



தொகுப்பு ஆசிரியர்

துரை. சோமாஸ்கந்தன்,

ஓதுவார்.

விலை 0-30 பைசா

# முன்னுரை

குழந்தைகளை வளர்ப்பது கஷ்டம்தான், ஆனால் ஒரு மனிதனை நல்லவனாக இருக்கும்படி செய்வது அதைவிடக் கஷ்டம்'' நமது முன்னோர்களின் (தந்தை, பாட்டனுக்குப் பாட்டன்) இரத்தம் நமது உடலில் ஓடிக்கொண்டிருக்கின்றன. அவர்கள் போற்றித்துதித்த அருள் திருப்புகழ்களை நாமும் நாள்தோறும் தவருது ஓதி உய்வு பெற இந்த நூல் பெரிதும் பயன்படும் உலகம் வாழ வெளியாகும். இதை அன்பர்கள் சட்டைப் பையில் வைத்துப் போற்றி ஓதுக என்று உங்கள் பொன்னார் திருவடியை வருடுகிறேன்.

இன்னிசைக் கலைமணி,

துரை, சோமாஸ்கந்தன் ஓதுவார்

விடியங்காடனடி விரும்பியே தொழுவார்க்கு
கடிகணபதி வருவான் அருளவே.

உ

# காங்கேய நல்லூர்
# ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி திருக்கோயி
## இராஜ கோபுரத் திருப்பணிப் பதிகம்

ஆதியில் எம் அருணகிரிக் கருள்செய்த அதிசயத்தை யாருங்கான
சோதி அயில் உடைய பிரான் பால்நதியில் வடபால் தன்சோலைசூ
வேதியர்கள் மறையொலிசேர் காங்கேய நல்லூரில் விளக்கமாக
மேதினியோர் மிகவியக்கக் காட்டியவோர் திருவருளை விளப்
கேண்மோ.

திருவளரு மதுரைவளம் பதியுறையும் சிவஞான செல்வம் மிக்க
அருமறையோர் குலமணியாம் அரிய திருப்புகழ்சாமி ஐயர்என்னும்
குருபரனுர் குரைகழலை எந்ததியும் பத்தியில் கைகுவித்துப்போற்று
பெருமை மிகு சீடனெனும் பாக்கியமும் யோக்கியமும் பெ
மேலோன்

மாதமரும் பாதியற்கு மவுனமறை ஓதுவித்த வள்ளிபங்கன்
காதலொடு மேவுதிருக்காங்கேய நல்லூர்வாழ் கருணைமிக்கோன்
ஓதரிய தவநெறியான் உயர்சரதமிகு மொழியான் ஒளிசெய்வேலே
தாதவிழும் பாதமலர் மறவாத மல்லையதாசன் என்போன்.

உயர்தூல லிங்கமெனும் சிகரிதனைக் குகன்தளியில் உவந்து செய்
நயனிலகு விழைவினனுய்ச் செயற்கரும் அச்செயலதனை நா
உன்னி

அயர்வறுநன் முயற்சியொடு கூடலில் சென்ருசிரியன் அரு
பெற்றுப்

புயல் எனவே பொருள்யீந்து மிகவிரைந்தக் கோபுரத்தைப் புது
மாலோ.

கருதரும் அச்சிகரிதனைப் புதுக்கிடுநாள் சாலியவாகன சகாப்த
அருமைமிகும் ஆயிரத்தெண் சதத்தைம்பான் சுக்கில ஆண்டாச
ஒருமதியில் தெய்தியும் ஏழ்தினந்தனில் அன் நெடுஞ்சிகர உ
சென்ருன்

பொருவருசீர் ஸ்ரீசைலவாசன் என அவர்க் குதித்த புதல்வன் அம்

சிகரிசெயும் பணியினர்க்குச் சிற்றுண வீந்தம்மைந்தன் திரும்புங்கால
செகமுழுதும் தன்னருளை வெளிப்படுத்த நெடுஞ்சிகரச் சென்ன
னின்று
மகவுதனைத் தலைகீழாய் புவிவீழ்த்தி அருவுருவாய் வந்துதோன்றி
அகமகிழக் கரமேந்தி ஆட்கொண்டான் ஆறுமுக அமலமூர்த்தி

அந்நாளில் சிகரியில் வீழ் அருணகிரி தனையினிதின் ஆண்டு கொண்
டான்.
எந்நாளும் அவன்புகழை எடுத்துரைப்பார்க் கிடரணுகாதென்னு
உண்மை
பன்னாளும் நிலைபெறவே அமரர்தொழு குமரகுரு பரமன் அம்மா
இந்நாளில் இம்மகவை இனித்தாண்டான் அருள்திறத்தின் எளிமை
என்னே

இன்னாரும் இனியவரும் இச்செயல் கண்டிறும்பூ துற்றெண்ண
எண்ணி
கல்நேரும் மனம் உருகிக் கைகூப்பி ஆனந்தக் கண்ணீர்பெய்து

முன்னாள் அவ் அருணகிரி தனையாண்டான் எனக்கேட்டோ[illegible]
முருகன் இன்று
மின்னாரும் இப்புவியில் இவன்கண்டோம் என இயம்பி வியந்[illegible]
நின்றார். 8

நின்னையலால் வேறுதுணை இல்லையென மகப்பெற்றேன் நிலத்தி[illegible]
வீழ்சேய்
தன்னைஎடுத் தணைத்தினிய மதுரைகுரு பரனுருஞ் சாமிவேதன்
பின்னைஉயிர்க் கிடர்விளையும் அத்ததியில் அணியுமெனப் பே[illegible]
அன்பால்
முன்னையருள் திருநீற்றை எடுத்தணிந்தான் அம்மகவு முசி[illegible]
தீர்ந்தான் 9

அவன்கருணை திறமென்னே அவனடியார் திருமொழியின் அருமை[illegible]
என்னே
சிவமிலகு திருநீற்றின் திறமென்னே திருப்பணிசெய் சீலம்என்னே
பவமறுக்கும் திருப்புகழின் அளப்பரிய பயன்என்னே பாரில்வாழு[illegible]

எவர்களும்தன் அருளுணரக் குகனிழைத்த அருஞ்செயலும் என்னே
என்னே. 10

## கும்பாபிஷேகம்

அருமறையா கமவிதியோ டாறுமுகப் பெருமானுக் கமலஆசான்
திருமொழிபோல் சீமுக ஆண் டாளிமதி விடையோரை திங்கள் ஓங்கும்
பருவமுறும் அநுஷமதில் கும்பாபி ஷேகமெனும் பணியும் செய்தான்
கருணை நிறை மல்லைய தாசனெனும் திருவருள்சேர் கலைவ
லோனே. 11

## வாழ்த்து

வாழிமுருகன் வனசரினகம் மா மடந்தை
வாழி மயில்வேலும் வாரணமும் — வாழியுயர்
செல்லூருங் கோபுரத்தின் சீர்வாழி காங்கேய
நல்லூரும் வாழிநயந்து.

## குறிப்பு

இஃது ஷெ கும்பாபிஷேகத்தன்று திருவருள்செயல் உலகெலாம் உணருமாறு மதுரைப்ரம்மஸ்ரீ திருப்புகழ் சுவாமி ஐயர் அவர்கள் பணித்தவாறு திருமுருக கிருபானந்தவாரி அவர்களால் இயற்றப் பெற்றது.

நன்கொடையாளர்
திருப்புகழ் சபையார்
காங்கேயநல்லூர் (1-1-1964)

உ
முருகா

அருள்மொழி அரசு திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களால்
**சரவணப்பொய்கை திருப்பணி செய்யப்பெற்றது.**

இங்ஙனம்
திருப்புகழ் சபையார்
காங்கேயநல்லூர்

கீலக மாசி 26
9-3-1969

ஓ

முருகா

AHOPAD NATHA TIRUVANMIYUR MADRAS

# சரவணப்பொய்கை திறப்புவிழா

கீலக வருடம் மாசிமாதம்-26 (9-3-1969)

திறப்பாளர்: தருமகுணசீலர் திருவாளர்

**A. S.** அருணசலம் பிள்ளை அவர்கள், வேலூர்,

இங்ஙனம்

திருப்புகழ் சபையார்

காங்கேயநல்லூர்

யாஅம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும்அல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும மூன்றும்

அருள்மொழிஅரசு திருமுருக கிருபானந்தவாரி அவர்களால் லட்ச ரூபாய் செலவில் கருங்கல் மண்டபம், வடக்கு கோபுரம், கந்தபு ஓவியங்கள் முதலான திருப்பணிகள் செய்து, விளம்பியாண்டு. அ திங்கள் 16-ம் நாள் (3-7-1958) வியாழக்கிழமை மகா கும்பாபிஷே நடந்தேறியது.

ஸ்ரீ. சுப்பிரமண்யசுவாமிகோயில்,
காங்கேயநல்லூர்

ம. சச்சிதான
நிர்வாக தர்மகர்த்தா

1—7—1952

கற்றதனா லாயபயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்

உ

முருகா

# காங்கேயநல்லூர் கந்தவேள் பதிகம்

அருணை முனிக் கின்னருள்செய் ஆறுமுகற் கண்ணால்
மருணையுள மேவு மணியே — கருணைவிடை
யானை முக மைந்துடையான் அன்புசெயும் ஐங்கரனே
யானைமுக வோனே யருள்

பூமாரி பொழிந்தமரர் போற்றுங்கோவே
    புலாலுடம்பால் மிகநலிந்து புலம்பிநொந்தேன்
மாமாரியெனக் கலுழ்ந்து வருந்தா நின்றேன்
    மயிலரசே அயிலெடுத்தமணியே ஈசன்
வாமாரி யைக்கினிய மகனே நின்னை
    மறந்தறியேன் துறந்தவர்கள் மனத்தில் மேவுங்
காமாரி புடைவிளங்கக் கருணையோடு
    காங்கேயநல்லூர் வாழ் கந்தவேளே

வேதனைமுன் வேதனைசெய் விகிர்த வேந்தே
வேதாந்த சித்தாந்த விமல வாழ்வே
பூதனைதன் உயிருண்ணும் புனிதன்போற்றும்
புத்தமுதே சுத்தசிவப்பொருளே கஞ்சப்
போதனையார் போதனை செய் பொருள் களீயும்
புங்கவனே துங்கமயிற் புரவியோனே
காதனையக் கானவர்தங் கனியை வேட்டுக்
காங்கே:யநல்லூர் வாழ் கந்தவேளே

எல்லாவற்றிற்கும் அடிப்படையாய் ஒரு சக்தி நிற்கிறது அச்சக்
வற்றதது. எல்லையற்றது அதன் முதல் எங்கேயே, முடிவு எங்கேயோ
அதற்கு உலகம் வழங்கிய பெயர்கள் பலப்பல —திரு. வி.

வாழ்க்கையின் பயன் ஆண்டவனைக் காண்பதுதான்
—மகாத்மாகாந்தி

மரந்தன்னை வைத்தவனை நீர் வேண்டாத
வகைநினைந்துன் பாலொன்றும் வேண்டுகில்லேன்

புரந்தன்னை எரித்தபிரான் புவனமுற்றும்
புரந்தன்னை யறியாத புனிதன் மைந்த
பரந்தன்னை யுறத்தன்னை மறந்துநின்றார்
பவமகற்றும் சிவமணியே பதிமுன் கொய்த
கரந்தன்னை வளர்த்தொருமா தரசை யாண்டு
காங்கேயநல்லூர் வாழ் கந்தவேளே.

மலைவாணற் கொடிமருவு மலையே சற்றும்
மனமடங்கும் வகையறியேன் வாடிநின்றேன்
கொலைவாணர் இடைநின்ற இளமான்போலே
குலைகின்றேன் சிவஞானக் கொழுந்தே முன்னாள்
சிலைவாணன்றனை வென்றோன் மருகாவேத
சிரப்பொருளே திருவருளை நாடிநின்ற
கலைவாணர் மருவியாபா லாறு சூழுங்
காங்கேயநல்லூர் வாழ் கந்தவேளே

மதியறியேன் நினதுபத மலரைப் போற்றும்
வகையறியேன் தகையறியேன் கந்தநின்சந்

நிதியறியேன் உபசாந்த நிலையில் என்றும்
நின்றறியேன் வென்றறியேன் புலனைவேத
விதியறியேன் துதியறியேன் பிறவிநீங்கும்
விதமறியேன் இதமறியேன் வேற்கைவேந்தே
கதியறியேன் எனைஆள்வாய் கருணைக்குன்றே
காங்கேயநல்லூர் வாழ் கந்தவேளே.

புற்புதமாம் உடலெடுத்துப் பொழுதுபோக்கிப்
புலர்கின்றேன் புனிதமறைப் பொருளே சீத
வெற்புதவும் உமைபயந்த வேதமூர்த்தீ
வேதாந்தக் கனிபழுத்து விளங்குங்காவே
அற்புதமே அயிலேந்தி மயில்மேல் தோன்றி
அடியவர்தங் கொடியவினை அகற்றுந்தேவே
கற்புநெறி மடவார்கள் கலந்துமேவுங்
காங்கேயநல்லூர் வாழ் கந்தவேளே.

ஐயனே பிறவாமை விழைந்தேன் சின்னாள்
அடிமைதனக் குரிமையேததுவும் வேண்டேன்

செய்யனே அறிவுதோன்றியநாள் தொட்டு
　　தீங்கதனை அருளறியாச் செய்தே னில்லை
மெய்யனே எனையாளா திருத்தல் என்னே
　　வேலேந்தும் வித்தகனே திகழ்ஈ ராறு
கையனே கருணை நிறை கடலே சீரார்
　　காங்கேய நல்லூர் வாழ் கந்தவேளே.

நீருலவு நெடுங்கழனி வேண்டேன் செம்பொன்
　　நிதி வேண்டேன் துதி வேண்டேன் நிறையும் வேண்டேன்
தாருலவு மால்பதமும் வேண்டேன் தேவ
　　தருவேண்டேன் உருவேண்டேன் தலைமை வேண்டேன்
சீருலவு நினது திருவடியை யென்றும்
　　சிந்தை செயுத் திருவொன்றே வேண்டும் எந்தாய்
காருலவு பொழில் புடையில் வயல்கள் சூழுங்
　　காங்கேய நல்லூர் வாழ்கந்தவேளே. 8

ஆண்டவன், வடிவமெடுத்து நம் முன் நிற்க மாட்டான் பேராபத்துக்களினின்று தப்புகிறோமே அந்த நிகழ்ச்சிகளின் வழியாகத்தான் தன்னை

(கடவுளை) பகுத்தறிவைக் கொண்டுகாண முடியாது பக்தியினல்
தான் காணமுடியும். — மகாத்மாகாந்தி

கற்பகவே லெறிந்த கருணைக்குன்றே
கற்கிமுகி தனைமாய்த்தோர் கலைஞன் றன்னை
வெற்பகத்தில் காத்தருள் செய் விமல மூர்த்தீ
வெற்றிவேற் பழம் பொருளே விபுதர் வேண்ட
அற்பகமில் அவுணர்தமை அடுதல் செய்த
ஆறுமுகத்தரசே யென் அருமை வாழ்வே
கற்பகமே கற்பகத்தின் கனியே காமர்
காங்கேய நல்லூர் வாழ்கந்தவேளே.

பற்றுரும் எனக்கில்லை நின்னை நாளும்
பற்றறவு பற்றினேன் பழனியப்பா
பொற்றுரும் பொலந்து கிலும் புவியும்வானும்
போற்றுவார்க் கருள்புரியும் புனிதமூர்த்தீ
அற்றுருக் கன்புசெயும் அடியார் என்றும்
அரியதிருப் புகழ்பாட அறங்கள் மல்கி

கற்றாரும் மற்றாருங்களித்து வாழுங்
காங்கேய நல்லூர் வாழ்கந்தவேளே.

வாழிமுருகன் மலரடிகள் வாழிவேழ மகள் வள்ளி
வாழிச்சேவல் மயில்வடிவேல் வாழிசைவத்திருநெறியும்
வாழி மகிழ்ந்து சராசரங்கள் வாழி இனிய வளஞ்சிறந்து
வாழி வாழி காங்கேய நல்லூர் வாழி வாழியவே.

ஆராய்ந்து பார்த்திருக்கிறேன் நான் அறிந்த எல்லாச்சமயங்களுக்குள் விசால நோக்கம் கொண்டது இந்து மதம் தான் என்பது உறுதி. ஆண்டவன் துணை புரிவான் என்பதில் நம்பிக்கைகொள். என்னையும் ஆதரிப்பானா என்ற அவநம்பிக்கை வேண்டாம். — மகாத்மாகாந்தி

## காங்கேயநல்லூர் முருகர் பதிகம்

பாரதந்தத்தால் பருப்பதத்தில் பண்புடைய
பாரதந் தீட்டியருள் பண்ணவனே பாரதனில்
காங்கேயநல்லூர் கணபதியே மன்னுயிர்க்குத்
சீர்சேர இடரின்றி புகழ்செய்.

வானவரு மாலயனு மதித்தமணி விளக்கை
மயிலேந்த அயிலேந்தி வருங்குமரவேளை
தானவனென் றுழல்கின்ற சழக்கரறியாத
தத்துவனை சித்தமிசைத் தித்திக்குந்தேனை.
மீனவர்வாழ் மதுரைதனில் புலவரிடர் தீர்த்த
வித்தகனை முத்தருளம் வீற்றிருக்குந் தேதவை
கானவர்தங் குலமகளைக் கலந்து மகிழ்வானைக்
காங்கேயநல்லூரில் கண்குளிரக் கண்டேன்.

விண்மணியை மெய்ஞ்ஞான வேலேந்தும் வேந்தை
வேதசிரப் பெருமணியை மெய்த்தவருள் மேவும்
உண்மணியை உமையீன்ற ஒப்பிலாமணியை
உம்பர்புகழ் ஒருமணியை ஞானத்
தண்மணியைத் தந்திமகள் தழுவுமரு மணியைத்
தவமணியைச் சிவமணியைத் தவசீலர்போற்றுங்
கண்மணியைக் கண்ணுதலார் கண்டுமகிழ் மணியைக்
காங்கேயநல்லூரில் கண்குளிரக் கண்டேன்.

ஆரணனைச் சிறைசெய்த அமரர்பெருமானை
அற்றார்கட் கருதவனை ஆனந்தவாழ்வைப்
பூரணனைப் புரமெரித்த புராதனற்குக் குருவைப்
புகழ் விரும்பார் தமையுலகம் புகழவருள் வானை
நாரணனை நான்முகனை நம்புமடி யாரை
நலமருளி யாட்கொண்டநாதனை வேலேந்துங்
காரணனை வாரணமின் கலந்து மகிழ் கோவைக்
காங்கேயநல்லூரில் கண்குளிரக் கண்டேன்

பாவலனை வரைதகர்த்தாள் பரமகுரு பரனை
பன்னிருகைப் பெருமானை என்னுயிர்நாயகனை
மாவலனை மடித்தவனை யாண்டசிகா வலனை
மாலயனுங் காணாத மாணிக்க மணியை
கோவலனை யாட்கொண்ட குமரகுக வேளைக்
குறவர்குலக் கொழுந்தணையுங் கோமானைவேள்விக்
காவலனைப் பாலாற்றின் கரையில்வளர் கவினூர்
காங்கேயநல்லூரில் கண்குளிரக் கண்டேன்.

மலைவளரு மதிக்கொழுந்தை மயிலேறு மன்னை
மருந்தாகிப் பிறவிநோய் மாற்றுமருத்துவனைச்
சிலைவளரும் இராகவற்குத் தூதனெனும் வாத
சேய்க்கருளிக் கதிர்கா த் திருத்தலம் வாழ்தேவைப்
புலைவளரும் புல்லருளம் போகாதவேலைப்
பொறைவளரும் புனிதருளம் பொருந்து பரம்பொருளை
கலைவளரும் புலவர்மகிழ் கந்தநாயகனைக்
காங்கேயநல்லூரில் கண்குளிரக் கண்டேன்

அதிதிதரு மகார்க்கருளும் ஆறுமுகத்தரசை
ஆணவத்தின் வலிதேய்த்த அடியவர்கட்கென்றும்
திதிதிதரு மெய்ஞ்ஞான தெய்வத்தை தேவர்
சிறைதீர்த்த செவ்வேளைக் கருவேளைக் காய்ந்த
மதிதிகழு மவுலிபற்ற மறையுரைத்த மணியை
மல்லைய தாசனெனும் மதிவாணன் பணிசெய்
கதிதினமு முதவுபுகழ் காருலவுசோலைக்
காங்கேய நல்லூரில் கண்குளிரக் கண்டேன்

விருதானை மருப்பொசித்தான் வியக்குமரு மானை
வேலவனை மேலவனைத் திருமுருக வேளை
வருதானையுடன் மலைந்த தாரகனைச் சிங்க
மாமுகனைச் சூரனைமுன் வடிவேற்கைகொண்டு
பொருதானைப் பொறையுடைய புண்ணியர்தஞ்சிந்தை
புகுவானைப் பொதுநீக்கிப் போற்றாதார் தம்மைக்
கருதானைக் கருதுமவர் கருத்தருளுங் கனியைக்
காங்கேய நல்லூரில்கண்குளிரக் கண்டேன். 7

அஞ்சதனைதன் அருமதலைக் கருள்புரிந்த அரசை
ஆறாறுங் கடந்துறையும் ஆறுமுகப் பொருளை
மஞ்சனைய மலர்க்குழலாள் வள்ளிமகிழ் மணியை
மலையாதார் மனத்துறையும் மலைமகள்தன் மகனை
வஞ்சனையுங் கொலைகளவு மறியாதார் வாழும்
வள்ளிமலை தனில்மேவு மாணிக்க விளக்கை
கஞ்சனைமுன் சிறைசெய்த கடவுளர் நாயகனைக்
காங்கேய நல்லூரில் கண்குளிரக் கண்டேன். 8

விடந்தானை யுற வொருசேய்க் கருளப்பர்க் கருளி
வியனாரூர் வீதிதனில் மெல்லியல்பால் தூது
நடந்தானை தாதையெனு நல்ல பெருமானை
நக்கீரற் கருள் புரிந்த நாயகனை யரவாய்க்
கிடந்தானைக் கச்சிதனில் ஆண்டக்ருபா கரனைக்
கிளர் மறைநான் கங்கமுடன் மனமாற்றமுற்றுங்
கடந்தானை நீதிநெறி கடவாதார் வாழுங்
காங்கேய நல்லூரில் கண்குளிரக் கண்டேன்.

அருணகிரிக் கருள்புரிந்த அருளின்பக் கடலை
ஆரியதவ மணி பாம்பன் அடிகளுள மேவும்
தருண மயில் வாகனனைத் தணிகை மணியான
தற்பரனைச் சிற்பரனைத் தமியேனை நாளும்
மருணலியத் துயரகற்றி மகிழ்ந்தருள் செய்வானை
மலைபிளந்த மலைமன்னை மன்னுதமிழ் மணியைக்
கருணைநிறை கற்பகத்தைக் கலைவாணர் வாழுங்
காங்கேய நல்லூரில் கண்குளிரக் கண்டேன்

## வாழ்த்து

வாழி வண்டமிழ் வைதிக சைவமும்
வாழி வான்முகில் மாமயில் சேவல் வேல்
வாழி வாரண மங்கைநல் வள்ளிமான்
வாழி வேலிறை வையகம் வாழியே.

## பொன்மொழி

ஒழுக்கங்களின் அமைப்பே சமயம்

— ஞானி எமர்சன்—அமரிக்கா.

தெய்வத்தின்மீது நம்பிக்கை இன்மை அல்லது நிரீஸ்வர வாதம் புத்திக்கோளாருல் ஏற்படுகிறது.

— புளூட்டார்க் கிரேக்க பேராசிரியர்

மனிதன் பாவம் செய்யாத நேரம்
தூங்கும் சமயம் தான்.

கடவுளிடத்திலிருந்து பிரிந்துவந்த உயிர்கள்
அவரைக் கூடுமாறு கூறுவதே சமயம்.

— டால்ஸ்டாய்—ரஷ்யஞானி.

(இறைவன்) நம்மை துன்பப்படுத்தித் தூய்மைப் படுத்தவே துன்டங்கள் தருகின்ருன். நோயும் துயரமும் தருகிருன். அவன் நம்முடைய பிரியமுள்ள தந்தை என்பதை உணராமல் அவனுடைய அருளை நோயாகக் கருதுகிறோம். அவன் அன்பை உணர்ந்தோமானுல், துன்பமும், துயரமும் இன்பமாகும்.

— துறவி லாரன்ஸ்.

(வேத) — புத்தகத்தில் உள்ளதில் அறிவுக்குப் பொருத்தமானதையெல்லாம் அறிவோடு ஏற்றுக்கொள்ளுங்கள் மிகுதியை நம்பிக்கையோடு ஏற்றுக்கொள்ளுங்கள். சாகும்போது மகிழ்ச்சியோடு மிக உத்தமனுகச் சாவீர்கள்.

— ஆபிரகாம் லிங்கன்,
ஜனதிபதி, அமரிக்கா

கடவுள் உண்டு என்ற என் நம்பிக்கை தவருகப்போய்விட்டா அறுபது அல்லது எழுபது வருட காலத்தை தான் நான் வீணுக் விட்டவனுவேன் கடவுள் இல்லை என்ற நாஸ்திகன் நம்பிக்கை தவருகப் போய்விட்டால் ஊழூழிகாலமெல்லாம் பாழாக்கியவ ஆவான்.

துறவி,

— R. க்ளோஸ்டர்.

இறை — கடவுள்

இரை — சாப்பாடு

இரை, தேடுவதோடு இறையுந்தேடு

— பாம்பன் சுவாமிகள்.

## திருவருட்செயல்

சிவத்திரு — மல்லையதாஸ் பாகவதர் அவர்களால் முருகப் பெருமான் கோயில் இராஜகோபுரத் திருப்பணி செய்து உச்சியில் கலச வேலை நடக்கும்பொழுது அவர் குமாரரும் திருமுருக கிருபானந்த வாரி அவர்கள் இளைய சகோதரருமான ஸ்ரீ சைலவாசன் என்பவர் சுக்கிலயாண்டு ஐப்பசித் திங்கள் எ-ம் நாள் (23—10—1929) புதன்

கிழமை மாலை 4-மணிக்கு சிற்பிகளுக்கு சிற்றுண்டி தந்து திரும்பு பொழுது கோபுர உச்சியிலிருந்து தவறி கீழே விழுந்துவிட்டார். கிரா மக்கள் திரண்டு ஓடோடிவந்து முருகப்பெருமானை வணங்கி திருநீ அணிவித்தனர். சில நிமிடங்கழித்து மூர்ச்சை தெளிந்து பேசினு எந்தவிதமான அடியுமில்லாமல் சுகமாக இருந்தனர். உச்சியிலிருந் தவறிய மைந்தனுக்கு உயிர் வழங்கிய முருகப்பெருமான் கருணை கிராம மக்கள் மனதார சிந்தித்து வாயார வாழ்த்தினர்.

கடவுள் உண்டு என்பது பற்றி ஐயப்படுவதற்கில்லை நா இருப்பது உண்மையானுல் நம்மைப் பெற்றோரும், அவர்களைப் பெ ற்றோரும் உண்மையானுல் பிரபஞ்சத்தைப் பெற்றவனும் உண்மை அவினில்லையேல் நாமும் இல்லை தான்.

— மகாத்மா காந்தி

ஆண்டவனுடைய பொறுமையைக் கண்டு வியந்து வ
கிறேன். நமக்கு வரும் கோபம் அவனுக்கு இல்லை ஆகா எவ்வள
பாபங்களை எவ்வளவு காலம் பொறுத்து வருகிருன்

— மகாத்மா காந்தி

நம்பிக்கையே வாழ்வு சந்தேகமே மரணம்.

— ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்

## மணி மொழி

எல்லா நாடுகளிலும் கடவுளைக் கண்ட ஞானிகள் தோன்
யிருக்கிருர்கள் ஒருவர்பின் ஒருவராக காட்சிபெற்ற மகா புருஷர்களு
ரிஷிகளும் தோன்றி மக்களுக்கு உபதேசித்தும் வழிகாட்டியும் வந்திரு
கிருர்கள். எல்லாமே பொய் புரட்டு என்று தள்ளிவிடுவது கண்ணை
மூடிக்கொண்டு நான் பார்க்கவில்லை அதனுல் இல்லை என்று கொன்
படியேயாகும்.

வாயினுல் அல்ல பிரார்த்தனை செய்வது, உள்ளத்தைக்கொண்
வழிபடவேண்டும் வாயில்லா ஊமையும் ஆண்டவனுக்குப் பிரார்
தனை செலுத்துவான், கொன்னல் பேச்சுக்காரனும் படிப்பு இல்லா
வனும் சுத்த மடையனும் எல்லோருமே ஆண்டவனை வழிபடலாம
தேன் கசியும் மொழியை ஆள் பவருங்கூட உள்ளத்தில் விஷயத்தை
மறைத்து வைத்திருப்பர் அல்லவோ அத்தகையோருடைய பிரார்
தனை ஆண்டவனை போய்ச் சேராது

## தேவாரம் - திருச்சிற்றம்பலம்

திருவலஞ்சுழி ] [ பண்-பந்துவரா

என்ன புண்ணியஞ்செய்தனை நெஞ்சமே
யிருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்

மன்னு காவிரி சூழ் திருவலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும்
வழிபடும் அதனாலே

மாதொர் கூறனை வலஞ்சுழி மருவிய
மருந்தினை வயற்காழி
நாதன் வேதியன் ஞான சம்பந்தன் வாய்
நவிற்றிய தமிழ்மாலை
ஆதரித்திசை கற்றுவல்லார் சொலக்
கேட்டுகந்தவர் தம்மை
வாதியாவினை மறுமைக்கும் இம்மைக்கும்
வருத்தம் வந்தடையாவே.

---

திருச்சிற்றம்பலம்.

ஓம் வேலுமயிலுஞ் சேவலுந் துணை

திருப்புகழ்

| | | |
|---|---|---|
| தேனியல் சொற் | — | கணிமாதர் |
| சேவைதனைக் | — | கருதாதே |
| யானெனதற் | — | றிடுபோதம் |
| யானறிதற் | — | கருள்வாயே |
| வானவருக் | — | கரசான |
| வாசவனுக் | — | கினியோனே |
| ஆனைமுகற் | — | கிளையோனே |
| ஆறுமுகப் | — | பெருமாளே. |

ஓம் விடியங்காடன் துணை

திருச்சிற்றம்பலம்

முருகனுடைய, —பலகோடி பெயர்களில் ஒன்று "விடியங்காடன்
ஆக உயர்வான மந்திரம் தினமும் தவருது
விடியங்காடன் துணை என்றுல் எல்லா நலனும் உண்டா(

## துரை, சோமஸ்கந்த ஓதுவார்—அருளியவை

வெற்றியருள் முருகநீ நற்றமிழ்சொல் அருக நீ
கற்றிடும்நல் அடியவரில் கலந்தின்பம் அருளும் நீ
முற்றிடும் நல்கதிர்நாடி விடியங்காடதிலேகி
துற்றிடும் நற்பண்பாடும் துரைசோவுக்கருள் கோவே

எடுப்பு

விடியங்காடா வேதனை எல்லாந்தவிர்
வீணே காலம் விழித்தேன் நானே —(விடி)

தொடுப்பு

ஆணவமாகிய ஆற்றினில் விழுந்தேன்
காணற்கரிய நின் கடைக்கண்ணால்பாரும் —(விடி)

முடிப்பு

வேண்டும் பொருளே வேண்டினேன் வினையை
காண்டிட வறிக்குணே நாகா நீயருள்

பூண்டிடும் நாகையா துரைச்சாமியின் தவத்தால்
ஈண்டிங் குழைத்திடும் துரைசோ ஓதுவாரின்—(விடி)

வாழ்த்து

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்சை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீரடியா ரெல்லாம்.

"வளர்கயாம் கண்டதமிழிசை
வளர்க சைவ நன்னெறி."

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS-4

இன்னிசைக் கலைமணி,

துரை, சோ. ஓதுவார்.

தொடர்பு கொள்ளவும் :—

**மகாபாரதம் இன்னிசையுடன்**

நிகழ்த்துவார்.

**துரை • சோமாஸ்கந்தன்,**
காங்கேயநெல்லூர் அஞ்சல்,
(வழி) காட்பாடி. (வ. ஆ.)

**R. K. பிரஸ்,**
**16/2, சுண்ணும்புகார வீதி,**
**வேலூர்-4. (வ. ஆ.)**